**<u>அசல் வழக்கு எண். 63/2019</u>**

28.10.2025

**பெயர் – கருப்பத்தாள்** (PW1)

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(1) நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் மற்றும் கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரம் தெரியும். 1ம் பிரதிவாதி நைனாசாமி எனது பக்கத்து பூமிக்காரர். 2ம் பிரதிவாதி கருப்பாத்தாளும் எனது பூமிக்கு பக்கத்து பூமிக்காரர் என்றால் சரிதான். தாவாவில் எத்தனை தாக்கு சொத்துக்கள் குறிப்பிட்டுள்ளேன் என்றால் தெரியாது தடம் சம்மந்தமாக தாவா தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்று தெரியாது. எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் மைவாடி கிராமம் சர்வே எண். 426 ல் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 426 யைத் தவிர வேறு சர்வே எண்ணில் எனக்கு சொத்துக்கள் இல்லை என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. வேறு சர்வே எண் குறித்து இந்த வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் தெரியாது. இந்த வழக்கில் இரண்டு செட்யூல் சொத்துக்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால் அதைப் பற்றி தெரியாது.

(2) சர்வே எண். 426 ல் உள்ள தடம் குறித்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வேறு சர்வே எண்ணில் உள்ள தடம் குறித்து வழக்கு நடத்தவில்லை என்றால் சரிதான் அந்த தடம் குறித்து தான் வழக்கு நடத்துகிறேன். எனது பூமிக்கு கிழபுறமாக தென்வடல் ரோடு உள்ளது என்றால் சரிதான். ரோட்டில் இருந்து முதலில் 10 அடி அகலமும் உள்ளே செல்லச் செல்ல குறுகி 3 அடி அகல தடமும் உள்ளது என்றால் சரியல்ல. கிழமேல் தடத்தில் இருந்து வடபுறமாக சற்று உயரமாக பிரதிவாதி நிலம் உள்ளது என்றால் தடத்திற்கு சமமாகத் தான் உள்ளது. கருப்புசாமி புதுார் ரோட்டை ஒட்டி எங்கள் பூமி உள்ளது. எங்கள் பூமிக்கு மேற்கு புறமாகவும், தெற்கு புறமாகவும் கருப்பாத்தாள் பூமி உள்ளது என்றால் சரிதான். கிழமேல் தடத்திற்கு மேற்கு புறமாக 1ம் பிரதிவாதி நைனாசாமி பூமி உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி நைனாசாமி பூமியில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் நாங்கள் தடத்தை பற்றி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். பத்திரப்படி 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பூமியை எனக்கு உரிமை

உள்ளதா என்றால் இல்லை தடத்தில் உரிமை உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வழக்குப்படி எங்கள் பூமியில் ஒரே தடம் தான் உள்ளது என்றால் சரிதான்.

(3) வழக்கில் சொல்லியுள்ள இரண்டு செட்யூல் சொத்துக்கள் சம்மந்தமாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவாச் சொத்து எனக்கு பாகப்பிரிவினைப் படி பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து. 2005ம் ஆண்டு பாகப் பிரிவினை பத்திரத்தில் உள்ள பாகதாரர்கள் திருமாத்தாள், கருப்பாத்தாள், ஜோதிமணி, இந்திராணி, துளசிமணி அனைவரும் எனது உறவினர்கள். அவர்கள் பூமி எனது பூமியின் அருகில் தான் உள்ளது. பாகப் பத்திரத்தில் உள்ள கருப்பாத்தாள் தான் இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். பாகப் பத்திரப்படி கருப்பாத்தாளுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் ஒரு பகுதியை 1ம் பிரதிவாதி விலைக்கு வாங்கியுள்ளார் என்றால் சரிதான். எனது உறவினர் அருணாச்சல கவுண்டரின் பூமி எனது பூமி அருகில் இல்லை சற்று தொலைவில் உள்ளது. வேறு தடம் சம்மந்தமாக அருணாச்சல கவுண்டர் மேல் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி வேறு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதைப் பற்றி தெரியாது.

(4) மைவாடி கிராமம் சர்வே எண். 462/2ல் எனக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றால் அதைப் பற்றி தெரியாது. சர்வே எண். 462/2ல் என்ன பாத்தியம் என்று தெரியாமலே பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட 2016ம் ஆண்டு பாகப் பத்திரப்படி சர்வே எண். 462/2ல் எந்த பாத்தியமும் இல்லை என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. 2005ம் ஆண்டு 2ம் பிரதிவாதி உள்பட மற்றவர்கள் பாகம் செய்து கொண்ட பின்பு 11 ஆண்டுகள் கழித்து தான் நாங்கள் பாகம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். எங்கள் பாகப் பத்திரத்தில் சர்வே எண். 462/2 என்று குறிப்பிட்டு எந்த சொத்தும் இல்லை என்றால் எனக்கு தாவாச் சொத்தைத் தவிர வேறு சொத்துக்கள் அதன் சர்வே எண் தெரியாது.

(5) தாவாவில் குறிப்பிட்டுள்ள பி செட்யூல் சொத்து விவரப் படி ஒரு சொத்து கிடப்பில் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண். 462/2ன் மொத்த விஸ்தீர்ணம் எவ்வளவு என்றால் தெரியாது. சாட்சி மீண்டும் 462/2 சொத்து எங்களுடைய சொத்து தான் என்று சொன்னார். சர்வே எண். 462/2 என்னுடைய சொத்து என்று பொய்யாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செய்த சமயத்தில் மற்றும் தாவாச் சொத்து குறித்து பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனது கணவர் தான் சொன்னார். நான் சொன்னேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரை விவரங்கள் தெரியாது. எதிருரை விவரங்கள் தெரியாமல் பிரமாண வாக்குமூலத்தில் அதன் விவரங்கள் தவறு என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட தடம் சர்வே எண் 426ல் எனது பூமியை ஒட்டி வடபுறமாகத்தான் உள்ளது என்றும் எனக்கு வேறு தடம் இல்லை என்றால் சரிதான். தாவாவில் நாங்கள் வரைபடம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அருணாச்சல கவுண்டர் மீது 1ம் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்து 1ம் பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பாகியதால் அவர் தூண்டிவிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கு விவரங்கள் அனைத்தும் உண்மை அல்ல என்றும் வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.10.28 17:57:43 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்